2013 மார்ச் 26]

மேலும், மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுகின்ற வகையில் 1–6–2011 முதல் 28–2–2013 வரையில் 591 புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் இதுவரையில் இல்லாத அளவில், அதிக எண்ணிக்கையில் திறக்கப்பட்டுள்ளன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு என்று சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களைப் பொறுத்தவரையில், குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும், அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். அதுபோன்ற நிலையில் 500–க்கும், 800–க்கும் இடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்குமேயானால் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் அந்தக் கடைகள் அமைக்கப் பெறுகிற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தக் கடையை அமைத்துக்கொள்ளலாம் என்கிற அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேலாக வருகின்றபோதுதான், ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிற கடை எந்த இடத்திற்குத் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் குறிப்பிட்டுச் சொன்னார் என்றால், தேவையின் அடிப்படையில், விதிகளுக்கு உட்பட்டு நிச்சயமாக அந்தக் கடை திறந்து வைக்கப்படும்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உடனடியாக ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

68—

மாசு தடுப்பு

***9704—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் சுற்றுப்புறப் பகுதிகளிலுள்ள ஏரிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

செஞ்சி வட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் முதல் கட்டமாக ஆவியாக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. எஞ்சியுள்ள பொருட்கள் அந்நிறுவனத்தால் மின்சாரம் தயாரிக்க கொதிகலனுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்திலிருந்து கழிவு நீர் வெளியேற்றப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, பாலப்பாடியில் அமைந்துள்ள ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலமாக ஏற்கெனவே மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின்மூலம் பெறப்பட்ட அனுமதியின்படி, அந்த நிறுவனத்திற்குத் தேவையான தண்ணீர் முழுமையாக அருகில் அமைந்துள்ள வராக நதியிலிருந்து மட்டும்தான் எடுக்கப்பட வேண்டும். மேலும், தினசரிப் பயன்பாட்டிற்கு எந்தவித காரணத்திற்காகவும் நிலத்தடி நீரைப் பயன்படுத்தக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. ஆனாலும்கூட நிலத்தடி நீர் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. மேலும், எவ்வித காரணங்களுக்காகவும் அந்த சர்க்கரை ஆலையிலிருந்து கழிவுகள் வெளியேற்றப்படக்கூடாது, கழிவுகள் அந்த நிறுவனத்தின் வளாகத்திற்குள்ளேயே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் மழைக் காலங்களில்கூட, மழை நீரும் அந்தக் கழிவு நீரும் கலக்கக்கூடாது என்றும் விதிமுறை இருந்தபோதிலும், மழைக் காலங்களில், அந்தக் கழிவுகள் மழை நீருடன் கலந்து அருகில் இருக்கக்கூடிய செம்மேடு, தென்பாலை, சொக்கனந்தல் போன்ற*

2013 மார்ச் 26]

ஏரிகளில் கலந்து, அந்த ஏரி நீர் முற்றிலுமாக மாசுப்படக்கூடிய ஒரு சூழ்நிலை, அதாவது நீரின் நிறம் கருமையாக மாறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆடு, மாடுகள்கூட அந்த நீரை உட்கொள்வதற்கு இயலாத சூழ்நிலை அங்கு அமைந்துள்ளது. எனவே, மழைக் காலங்களில் அந்தக் கழிவுகளும், மழை நீரும் கலக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். அதேபோல், அந்த co–generation plant–ல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியை மட்டும்தான் கேட்கிறேன். கரும்பிலிருந்து எடுக்கப்படும் பகாஸை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. பகாஸை மட்டும் பயன்படுத்தினால், அங்கிருந்து அதிகப்படியாக சாம்பல் வந்து படியாது. ஆனால், சுற்றியிருக்கக்கூடிய கிராமங்களான தென்பாலை, செம்மேடு, தேவந்தாங்கல், கலத்தம்பட்டு, பாலப்பாடி, புதுப்பாளையம் போன்ற பத்து கிராமங்களில் அதிகப்படியாக சாம்பல் படிவதாக அந்த ஊர் மக்கள் புகார் கூறியிருக்கின்றனர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், கேள்வியை மட்டும் கேளுங்கள். விளக்கமாகப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் தொழிற்சாலையின் செயல்பாட்டில் விதிமீறல்கள் எதுவும் இருப்பது நிரூபணமானால், இந்த அரசு, விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு தமிழக முதல்வரின் பதிலுக்கு பணிவான நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.*